# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2015.03.30 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

# நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்)

**2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நிதி அமைச்சர் அவர்களினால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச்சட்டத்தின் 3ஆம் பிரிவினைத் திருத்துகின்றது என்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப் பயனானது, பின்வருவனவாதல் வேண்டும் -

(அ) நிதிசார் சேவைகளை வழங்குதல் தொடர்பில் வரி செலுத்தப்படுவதற்கான முறையை கணிப்பிடும் புதிய முறையை அறிமுகப்படுத்துகிறது;

(ஆ) நிலையானசொத்துக்களதும் திருத்தங்களதும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஓர் ஆளின் மீது அத்தொழிலிலிருந்து வரும் வருமானத்தின் மீது வரியைச் செலுத்துவதற்கான பொறுப் பைச் சுமத்துகின்றது; அத்துடன்

(இ) வரி செலுத்துவதற்கான பொறுப்பிலிருந்து குறித்த சில பொருட்களுக்கு விலக்களிக்கிறது.

**வாசகம் 3** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்வதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, உற்பத்தியாளர் தவிர்ந்த வேறு எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழானவரிவரவைப் பெறுவதை தவிர்க்கின்றது.

**வாசகம் 4** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆ என்னும் பிரிவை உட்புகுத்தி இலத்திரனியல் தொடர்பாடல்கள் அல்லது இலத்திரனியல் பதிவேடுகளின் பயன்பாட்டுக்கு வசதி யளிக்கிறது.

**வாசகம் 5** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை மாற்றீடு செய்வதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, ''சேவை'' என்னும் வரைவிலக்கணத்தை மாற்றீடுசெய்கிறது.

**வாசகம் 6** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாவது அட்டவணையைத் திருத்து கின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அவ்வட்டவணையின் சட்டப்பயனானது, குறித்தசில பொருட்கள் தொடர்பிலான விதிவிலக்குகளின் தற்போதைய கட்டளைக்கற்களை மீளாய்வு செய்தலாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம் குறித்தசில ஏற்பாடுகள் வலுவுக்கு வரும் தேதிகளைக் குறிப்பிடுகின்றது.

**வாசகம் 8** : 2015, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கி இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிவரையிலான காலப்பகுதியின் போதுவரியைச் சேகரிப்பது தொடர்பில் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட எல்லா செயல்களையும் வலிதுடையதாக ஆக்குதலாகும்.

ச.வ.ஒ 14/2015

**2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** (1) இச் சட்டம், 2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் வேறுபட்ட நடைமுறைத் தேதிகள் இதன்கீழ் குறித்துரைக்கப்பட்டாலன்றி 2015, சனவரி முதலாந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) 6ஆ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** 2014 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப் பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (iii) ஆம் பந்தியில் முதலாவது காப்பு வாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“ஆயின், நிதிசார் சேவைகள் தொழிலை ஏற்பாடு செய்கின்ற தொழிலைக் கொண்டுநடாத்தும் எவரேனும் ஆளினால் இலங்கையிலுள்ள ஏதேனும் நிதிச்சேவையின் வழங்கலிலிருந்தான பொறுப்பாகக் கூடிய மொத்த வரவு, இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும் பின்வருவனவாதல் வேண்டும்-

2-PL 008879 - 450 (2015/03)

(அ) 2014, செப்தெம்பர் 30 ஆந் தேதியன்று அல்லது முன்னர் முடிவுறுகின்ற ஏதேனும் காலாண்டுக்கும் 2014 ஒக்டோபர் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் 2014 ஒக்டோபர் 24 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கும் ஏதேனும் நிதிச்சேவையின் வழங்கலின்மீது சேர்பெறுமதி வரியைச் செலுத்துவதற்காக 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டத்தின் 25இ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் (5) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் ஏற்றிக் கூறப்படற்பாலதான முறையை ஏற்புடையதாக்குகின்ற நோக்கங்களுக்காக கணக்கிடப்பட்டதும், அத்தகைய நிதிச்சேவைக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதாகவுள்ளதுமான பெறுமதி சேர்ப்பாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) 2014 ஒக்டோபர் 25 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் 2014 திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கும் மற்றும் 2015 சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டுக்கும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 25அ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் வழங்கலின் பெறுமதியாக இருத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய நிதிசார் சேவைக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதாகவுள்ளதுமான பெறுமதி சேர்ப்பு, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 25இ என்னும்

பிரிவின் (4) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் (5) ஆம் உட்பிரிவில் குறிப் பீடு செய்யப்படும் ஏற்றிக் கூறப்படற்பால தான முறையை ஏற்புடையதாக்குகின்ற இச் சட்டத்தின் நோக்கத்திற்காக நிதிசார் சேவை கள் தொழிலின்மீது வரிக் கொடுப்பனவிற் காக கணக்கிடப்படுதல் வேண்டும்.";

(ஆ) அதன் (iii) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(iiiஅ) பிரிவு 2 இன் (1) ஆம் உட்பிரிவில் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் ஆள் தொடர்பில் (iii) ஆம் உட்பந்தி யின் நோக்கங்களுக்காக, நிலையான சொத்துக் களதும் மற்றும் அவற்றின் மீதான திருத்தங் களதுமான தொழிலிலிருந்து எழுகின்ற பெறுமதி என்பது, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் கீழான சேர் பெறுமதி வரியின் நோக்கத்துக்காக அச்சேவைக் காக தீர்மானிக்கப்படும் பெறுமதியாகும், ஆனால் முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தில் குறிப்பீடுசெய்யப்படும் ஏதேனும் விலக்களிக்கப்பட்ட சேவையின் பெறுமதியை உள்ளடக்காது.";

(இ) அவ்வுட்பிரிவின் (iv) ஆம் பந்தியில்-

(i) (9) ஆம் உட்பந்தியில் "சில்லறை விற்பனை; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சில்லறை விற்பனை;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ii) பத்தாம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்திகளை இடுவதன் மூலமும்:-

"(10) "எல்பி வாயு;

(11) சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபாரப்பொருள் விவரண மற்றும் கோவை யிடும் இலக்கங்களின் கீழ் இனங்காணப்பட்டதும் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் இறக்குமதி யின்போது உற்பத்திவரிக்குப் பொறுப்பாகின்றது மான ஏதேனும் வாகனங்கள், 2014 ஒக்டோபர் 25 ஆம் தேதியன்று விற்கப்படாது மீதியாகவுள்ள அத்தகைய வாகனங்கள் எனில், அவை 2014, ஒக்டோபர் 25 ஆம் தேதிக்குப் பின்னர் இறக்குமதி செய்யப்பட்டிருக்குமாயின் அவ்விறக்குமதிமீது அத்தகைய உற்பத்திவரிகளுக்கு வேறுவகையில் பொறுப்பாகக்கூடிய அத்தகைய வாகனம் உள் ளடங்கலாக, இறக்குமதியாளரினால் மாத்திரம் விற்கப்பட்ட அத்தகைய வாகனங்கள்;

(12) சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபாரப்பொருள் விவரண மற்றும் கோவை யிடும் இலக்கங்களின்கீழ் இனங்காணப்பட்டதும், இறக்குமதியின்போது 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்திவரி (விசேட ஏற்பாடு கள்) சட்டத்தின் கீழான உற்பத்திவரி மற்றும் 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழான ஆயவரி என்பவற்றிற்கு பொறுப்பாகும் சிகரெட்டுகள், 2014, ஒக்டோபர் 25 ஆந் தேதியன்று விற்கப் படாது மீதியாகவுள்ள அத்தகைய சிகரெட்டுகள் எனில், அவை 2014, ஒக்டோபர் 25 ஆம் தேதிக் குப் பின் னர் இறக்குமதி செய்யப்படுமாயின் அவ் இறக்குமதிமீது அத்தகைய உற்பத்திவரி மற்றும் ஆயவரிகளுக்கு வேறுவகையில் பொறுப்பாகக் கூடிய அத்தகைய சிகரெட்டுகள் உள்ளடங்கலாக, இறக்குமதியாளரினால் மாத்திரம் விற்கப்பட்ட அத்தகைய சிகரெட்டுகள்; அத்துடன்

*(13)* சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபாரப்பொருள் விவரண மற்றும் கோவை யிடும் இலக்கங்களின் கீழ் இனங்காணப்பட்டதும் இறக்குமதியின்போது 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறை பாதுகாப்புச் சட்டத்தின் கீழான சுங்கத்தீர்வை மற்றும் 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழான ஆயவரி என்பனவற்றிற்கு பொறுப்பாகக் கூடியதுமான மதுபானங்கள் 2014 ஒக்டோபர் 25 ஆம் தேதிக்குமுன்னர் இறக்குமதி செய்யப்பட்டு 2014 ஒற்றோபர் 25 ஆம் தேதியன்று விற்கப்படாது மீதியாகவுள்ள அத்தகைய மதுபானங்கள் எனில், அவை 2014 ஒக்டோபர் 25 ஆம் தேதிக்குப் பின்னர் இறக்குமதிசெய்யப்படுமாயின் அத்த கைய உற்பத்திவரி மற்றும் ஆயவரிகளுக்கு வேறு வகையில் பொறுப்பாகக்கூடிய அத்தகைய மதுபானங்கள் உள்ளடங்கலாக, இறக்குமதி யாளரினால் மாத்திரம் விற்கப்பட்ட அத்தகைய வருமானங்கள்.”.

*(2)* அதன் *(4)* உட்பிரிவில் (iii) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“(iii) (iv) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்படும் எவை யேனும் சேவைகள் தவிர்ந்த எவையேனும் பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்கலிலிருந்தான அத்தகைய ஆள் பொறுப்பாக்கப்படக்கூடிய மொத்தவரவு, பின்வரு வனவாதல் வேண்டும்-

(அ) ஏதேனும் காலாண்டு 2011, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது பின்னர் தொடங்குகின்ற ஆனால் 2013 சனவரி 1ஆந் தேதிக்கு முன்னர் முடிவுறும் அத்தகைய காலாண்டாயிருப்பின் ஐந்து இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத தொகை;

(ஆ) ஏதேனும் காலாண்டு 2013 சனவரி 1ஆந் தேதியன்று அல்லது பின்னர் ஆனால் 2015 சனவரி 1ஆம் தேதிக்கு முன்னர் முடிவுறும் அத்தகைய இயைபான காலாண்டாயிருப்பின் மூன்று மில்லியன் ரூபாவிற்கு மேற்படாத தொகை; அத்துடன்

(இ) 2015, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டின் அத்தகைய இயைபான காலாண்டாயிருப்பின் மூன்று கோடி எழுநூற்று ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்படாத தொகை;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** 2012ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவு, அப்பிரிவில் "இயைபான காலாண்டுக்காக" என்னும் சொற்கள் தொடங்கி அப்பிரிவு முடிவு வரையுள்ள சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

''இயைபான காலாண்டுக்காக 4ஆம் பிரிவின் கீழ் செலுத்தப்பட்ட முன்கூட்டிய வரிக்கொடுப்பனவாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், மேலும் எச்சூழ்நிலையிலும் அத்தகைய வேறு உற்பத்தியாளர் தவிர்ந்த எவரேனும் ஆளினால் 4ஆம் பிரிவின்கீழ் செலுத்தப்பட்ட வரி முற்பணக் கொடுப்பனவொன்றாகக் கருதப்படுதலாகாதென்பதுடன், எதிரீடு, ஏதேனும் பொருளின் உற்பத்தியின் தொழிலிலிருந்தான மொத்த வரவின்மீதான வரி பொறுப்புடைமையை நீடித்தலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதென்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 6ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"இலத்திரனியல் தொடர் பாடல்கள் அல்லது இலத்திரனியல் பதிவேடுகளைப் பயன்படுத்துதல்.

6ஆ. அமைச்சரானவர் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியின் விதப்புரையின்மீது 2006ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவில் குறித்துரைக்கப்படும் கருமங்களுக்காக இலத்திரனியல் தொடர்பாடல்களின் அல்லது இலத்திரனியல் பதிவேடுகளின் பயன்பாட்டை அதிகாரமளிக்கும் அல்லது வசதிப்படுத்தும் நோக்கங்களுக்காக ஒழுங்குவிதியை ஆக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. 2011ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க,சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவில் “சேவை” என்னும் சொல்லமைப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“சேவை” என்பது நிலையான சொத்துக்களதும் அவற்றின் மீதான திருத்தங்களதும் தொழிலை உள்ளடக்குகின்றது; ஆனால் 2011, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் முடிவடைந்த ஏதேனும் காலப்பகுதிக்காக இச் சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் II இல் குறித்துரைக்கப்படும் ஏதேனும் விலக்களிக்கப்பட்ட ஏதேனும் சேவையை உள்ளடக்காது; அத்துடன்”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**6**. 2014ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் பாகம் I இல்-

(அ) அதன் (xxvi) என்னும் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய விடயத்தை இடுவதன் மூலமும்:-

"(xxvi) தொழில் தொடர்பில் இறக்குமதி செய்யப்பட்ட மாதிரிகள் பின்வரும் பெறுமதியையுடையதாயிருத்தல் வேண்டும்-

(அ) அத்தகைய மாதிரிகள் 2015, சனவரி 1ஆம் தேதிக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்டிருப்பின் இருபத்தைந்தாயிரம் ரூபாவிற்கு மேற்படாதவையாகவும்; அத்துடன்

(ஆ) அத்தகைய மாதிரிகள் 2015, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது பின்னர் இறக்குமதி செய்யப்பட்டிருப்பின் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாதவையாகவும்:

அத்துடன் சுங்கப் பணிப்பாளர் தலைமை யதிபதியால் தரப்பட்டுள்ளவாறான அத்த கைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக் கமைவாகவும் இருத்தல் வேண்டும்;";

(ஆ) (XLV) ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"(XLV) சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபாரப் பொருள் விவரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் வகுப் பாக்கப்பட்டதும் நிதி அமைச்சினால் அங்கீ கரிக்கப்பட்டதுமான பொறித்தொகுதி அல்லது சாதனமாகவுள்ள 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப் பட்ட இலங்கை மின்சாரசபையினால் மின்சாரத்தினை உற்பத்தியாக்கும் நோக் கத்திற்கென அல்லது இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை செய்துகொண் டுள்ள ஏதேனும் நிறுவனம் மின்சாரத்தை விநியோகிப்பதற்கு இறக்குமதி செய்யப் படும் அல்லது உள்ளூரில் கொள்வனவு செய்யப்பட்ட ஏதேனும் பொறித் தொகுதி அல்லது சாதனம்;";

(இ) அதன் (XLVI) ஆம் விடயத்தில் "தேங்காய் எண்ணெய்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தேங்காய் எண்ணெய்;" என்னும் சொற் களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஈ) அதன் (XLVI) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களை உட்புகுத்துவதன் மூலமும் :-

“(XLVII) *அதன் துறைமுகத்தினுள் பிரத்தியேகமாகப் பயன்படுத்துவதற்காக இலங்கைத் துறைமுக அதிகாரசபையினால் இறக்குமதி செய்யப்படும் எவையேனும் பொறித் தொகுதி, உபகரணம் அல்லது உதிரிப் பாகங்கள்;*

(XLVIII) *சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபாரப்பொருள் விவரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் இனங்காணப்பட்டதும், 1989 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரிச் சட்டத்தின்கீழ் இறக்குமதியின்போது உற்பத்தி வரிக்குப் பொறுப்பாகக் கூடியதுமான ஏதேனும் மோட்டார் வாகனம், அல்லது 2014, ஒக்டோபர் 25 ஆம் தேதியன்று விற்கப்படாது தயாரிப்பாளர் வசம் மீதமாகவுள்ள அத்தகைய தயாரிக்கப்பட்ட மோட்டார் வாகனம் உள்ளடங்கலாக தயாரிப்பின் மீது மேற்குறித்தவரிக்குப் பொறுப்பாகும் அத்தகைய ஏதேனும் மோட்டார் வாகனம்;*

(XLIX) *சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபாரப்பொருள் விவரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் இனங்காணப்பட்டதும், 1989 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரிச்சட்டத்தின் கீழான உற்பத்தி வரி மற்றும் 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின்கீழான ஆயவரி என்பவற்றிற்குப் பொறுப்பாகக்கூடியதுமான சிகரெட்டுகள், இறக்குமதியின்போது அல்லது உற்பத்தியின்போது உற்பத்திவரிக்கு*

பொறுப்பாகக்கூடிய சிகரெட்டுகள், 2014 ஒக்டோபர் 25 ஆம் தேதியன்று விற்கப் படாது மீதியாகவுள்ள அத்தகைய உற்பத்தி செய்யப்பட்ட சிகரெட்டுகள் எனில், அவை 2014, ஒக்டோபர் 25 ஆம் தேதிக்குப்பின்னர் உற்பத்தி செய்யப்படுமாயின் அவ்வரி களுக்கு உற்பத்தியின்போது வேறு வகையில் பொறுப்பாகக்கூடிய அத்தகைய சிகரெட்டுகள் உள்ளடங்கலாக; அத்துடன்

(XLX) சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபாரப்பொருள் விவரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் இனங் காணப்பட்டதும், 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறை பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், சுங்கத்தீர்வைக்குப் பொறுப் புடையதும், இறக்குமதியின்போது, 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழான ஆயவரி அல்லது உற் பத்தியின்போது மதுவரிக் கட்டளைச் சட்டம் (52 ஆம் அத்தியாயம்) விடயத்திற் கேற்ப, வரிப்பொறுப்புக்குள்ளாகக் கூடியது மான மதுபானம், 2014, ஒக்டோபர் 25 ஆம் தேதியன்று விற்கப்படாது மீதியாக வுள்ள அத்தகைய உற்பத்திசெய்யப்பட்ட மதுபானம் எனில், அவை 2014, ஒக்டோபர் 25 ஆம் தேதிக்குப் பின்னர் உற்பத்தி செய்யப்படுமாயின் அவ்வரிகளுக்கு உற்பத்தியின்போது வேறுவகையில் பொறுப்பாகக்கூடிய அத்தகைய மதுபானம் உள்ளடங்கலாக.”.

(2) அவ்வட்டவணையிற் பாகம் II இல்:-

(அ) அதன் (vi) ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய விடயத்தை இடுவதன் மூலமும்:-

"(vi) *2014, ஒக்டோபர் 25 ஆந் தேதிக்கு முன்னர் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் நிதிக்குத்தகை உடன்படிக்கையில் சம்பந்தப்பட்ட எவையேனும் அசைவுள்ள ஆதனங்கள் தொடர்பிலான நிதிக் குத்தகை வசதிகளை ஏற்பாடு செய்தல்;*";

(ஆ) *அதன்* (vii) *ஆம் விடயத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய விடயத்தை இடுவதன் மூலம்:-*

"(vii) சேவை-

(அ) *உப ஒப்பந்தக்காரர் அன்றி நிர்மாண ஒப்பந்தக்காரரொருவரினால் 2011, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர்; அல்லது*

(ஆ) *நிர்மாண ஒப்பந்தக்காரர் அல்லது உப ஒப்பந்தக்காரரொருவரினால் 2011, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது பின்னர்,*

வழங்கப்படும் சேவைகள் ஏதேனும் கட்டிடம், வீதி, பாலம், நீர்வழங்கல், வடிகால், கழிவுநீர் வடிகால் முறைமை, துறைமுகம், விமான நிலையம் என்பவற்றை நிருமாணித்தல் அல்லது தொலைத்தொடர்பாடல் அல்லது மின்சாரம் என்பவற்றில் ஏதேனும் உட்கட்டமைப்பு கருத் திட்டத்தில் அத்தகையன தொடர்பிலான சேவை களாக இருக்குமளவுக்கு;";

(இ) *அதன்* (xiii) *என்னும் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய விடயத்தை இடுவதன் மூலம்:-*

"(xiii) *உள்ளூர் உற்பத்தியில் விடயத்துக்கேற்ப எவரேனும் காப்புறுதி முகவரால் அல் லது தரகுப்பண முகவரால் பெறப்படற் பாலதான தரகுப்பணம் அல்லது தரகின் அளவு வரை ஏதேனும் ஏலவிற்பனை யாளரினால், தரகரினால், காப்புறுதி முகவரினால் அல்லது தரகு முகவரி னால் வழங்கப்படும் சேவைகள்;*";

(ஈ) அதன் (xxviii) என்னும் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய விடயத்தை இடுவதன் மூலமும்:-

"(xxviii) 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்பாடல் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் தொலைத்தொடர் பாடல் அறவீட்டுக்கு பொறுப்புடைய வையும், தொலைத்தொடர்பாடல் சேவைகள் மற்றும் அச்சட்டத்தில் தொலைத்தொடர்பாடல் சேவை களை வரைவிலக்கணஞ்செய்யும் அத்தகைய பொறுப்புடைமையிலி ருந்து விசேடமாக விலக்களிக்கப்படு வனவுமான சேவைகள்.

(உ) (xxxvi) என்னும் விடயத்தில் "ஏதேனும் சேவை; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் சேவை;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஊ) அதன் (xxxvii) என்னும் விடயத்தில் "வழங் கப்பட்ட சேவைகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வழங்கப்பட்ட சேவைகள்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(எ) (xxxvii) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய விடயத்தை சேர்ப்பதன் மூலமும் :-

"(xxxviii) வதிவிட மனைகளின் நிருமாண மாகவும் விற்பனையாகவும் அமை வதும் அத்தகைய வதிவிட மனை களை வழங்கல்கள் தொடர்பிலான கருத்திட்டத்தின் நிருமாணத்தின் பெறுமதி பத்து மில்லியன் அமெரிக்க டொலர்களை அல்லது அதையொத்த பெறுமதியான வேறேதேனும் நாண யத்தை விஞ்சாததாகவுள்ளதுமான நிலையான சொத்துக்களதும் மற்றும் அதன்மீதான திருத்த தொழில்."

**7**. இச்சட்டத்தின் 3(2)(iv) ஆம் பிரிவின் (11), (12) மற்றும் (13) என்னும் பந்திகள் மற்றும் அட்டவணையின் பாகம் I இன் (XLVIII), (XLIX) மற்றும் (XLX) என்னும் இனங்கள் 2014, ஒக்டோபர் 25ஆந் தேதியன்று எல்லா நோக்கங்களுக்காகவும் நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அட்டவணையின் பாகம் II இன் (XXVIII), என்னும் இனம் 2014, சனவரி 1ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயன்.*

**8**. உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி அல்லது சுங்கப்பணிப்பாளர் தலைமையதிபதி, 2015, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கி இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாளுக்கு ஏற்புடையதாகுகின்றதோ அவ்வாளிடமிருந்து இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றிதழில் புறக் குறிப்பிடப்பட்ட தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின் போது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை கருத்திற்கொண்டு சேகரிக்கப்பட்ட வரி முதன்மைச்சட்டவாக்கத்தின் முறையே பிரிவு 4 இல் பிரிவு 5 இன் ஏற்பாடுகளின் கீழ் விடயத்துக்கேற்ப சேகரிக்கப்படுமிடத்து, அத்தகைய சேகரிப்பானது அத்தகைய நோக்கங்களுக்காகவும் செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படுகின்றதாகவும் கருதப்படுதல் வேண்டும்:

*செல்லுபடியாக்குதல்.*

ஆயின், இப்பிரிவின் மேற்சொல்லப்பட்ட ஏற்பாடுகள், ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது கட்டளையை அல்லது மேற்சொல்லப்பட்ட காலப் பகுதியின் போது சேகரிக்கப்பட்ட ஏதேனும் வரி தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் முடிவுறாதுள்ள ஏதேனும் நடவடிக்கைமுறையை பாதித்தலாகாது.

**9**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்